

# க்ருஷ்ணப்ரியே!

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

"ஸ்ரீ" என தொட்டே ஸ்ரீகாந்தன், ஸ்ரீனிவாசன் என இப்படி பகவானின் எல்லா பெயர்களும் தொடங்குகின்றன. தமிழில் ஆழ்வாரும் "திருவில்லா தேவரை தேறல் மின் தேவு" என்கிறார். 'பெரியபிராட்டி', 'மஹாதேவ்யை', 'மஹாலக்ஷ்மி', 'லக்ஷ்மி' என விஷ்ணுபத்னியான லக்ஷ்மிக்கு தமிழ்நாட்டில் பல திவ்யதேசங்களில் பல பெயர்களில் சன்னதி இருக்கிறது. 'ஸ்ரீ' எனும் சப்தமே மிக அழகானது. 'ஸ்ரீ' இல்லாமல் உலகத்தில் ஒன்றுமே இல்லை.

நான் யோசித்து பார்த்தேன். உலகில் பகவான் பல அவதாரங்களை எடுத்திருக்கிறான். மத்ஸ்ய, கூர்ம, வராஹ என அநேகமாக எல்லா அவதாரங்களும் தர்மத்தை ஸ்தாபிக்கத்தான் வந்தவை. இதில் ராம கிருஷ்ணாதி அவதாரங்களும் அடங்கும். க்ருஷ்ணனும் அர்ஜுனனிடம் "எப்பொழுதெல்லாம் தர்மத்திற்கு ஹானி ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அவதரிக்கிறேன்" என்கிறான். தர்மத்தை ஸ்தாபிக்கத்தான் பகவான் அவதரிக்கிறான் என்பதில் ஆட்சேபணை இருக்கமுடியாது.

"பௌத்தர்" என ஒரு மிக பெரிய மகான் இருந்தார். அவர் பல நல்லுபதேசங்களை தந்து உலகில் அஹிம்சையை ஸ்தாபித்துவிட்டு சென்றார். அதேபோல மஹாவீரர் என்ற பெரியவரும் அஹிம்சையை ஸ்தாபிக்க நிறைய முயற்சிகள் செய்து அஹிம்சையை ஸ்தாபித்தார். அதுபோல எவ்வளவோ பெரியவர்களின் உதாரணங்களை சொல்லலாம். மக்கள் கஷ்டப்படும்பொழுது அந்த கஷ்டத்தை தீர்ப்பதற்காக பல மகான்கள் பலருக்கு அபயம் தந்து அந்தந்த துயரங்களில் இருந்து காப்பாற்றி இருக்கிறார்கள்.

பாகவதத்தில் வரும் 'ப்ருது' எனும் பெரியவர்தான், "பூமியில் பல ஓஷதிகள் இருக்கிறது; இதை பயன்படுத்தலாம்", என கண்டுபிடித்து சொன்னார்.

அதுபோல எவ்வளவோ நல்ல உள்ளம் கொண்ட அருமையான பெரியவர்கள் மக்களும், நாடும் சமுதாயமும் வளரவேண்டும் மக்களின் நாகரீகம் மேம்படவேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டிருக்கின்றனர். இவர்கள் பகவானின் அவதாரங்கள் இல்லை; எனினும் இத்தகைய நல்லுள்ளங்களுக்கு பல உதாரணங்களை சொல்லலாம். விஞ்ஞானத்தின் மூலம் மனித இனத்திற்கு தொண்டாற்றியவர்கள் பலர். உலகில் பல தொழில்கள் மேம்பட பலரின் ஆய்வும் உழைப்பும் முக்கிய காரணம். மொழியினால் எவ்வளவோ விதமாக பண்பாட்டையும் நாகரீகத்தையும் வளர்த்து இருக்கின்றனர் பலர். தத்தம் இன மக்களுக்காக தன்னலமற்று உழைத்தவர் பலர். மஹாத்மாகாந்தி கூட சத்தியத்திற்காக பாடுபட்டார். எல்லாம் சரி. இன்று மனிதன் அறிவினால் மிகவும் வளர்ந்து சந்திரனுக்கே போய் விட்டான். அவன் நாளை செவ்வாய்க்கு போவதில் வெற்றியும் பெறலாம். ஏன், மனிதர்கள் தங்குவதற்கு ஏற்றதாக வேறு ஒரு கிரகம் கண்டுபிடித்து அங்கே மனிதன் குடியேறவும் செய்யலாம். விஞ்ஞான வளர்ச்சியில் இது எல்லாம் கைகூடாது என சொல்ல முடியாது. அதனால் ஒருக்கால், இன்று ருஷ்ய உக்ரைன் போர் நடைபெறுவதைப்போல வேற்று கிரகவாசிகளுடன் யுத்தம் வரலாம். விஞ்ஞான வளர்ச்சி அப்படிப்பட்டது. விஞ்ஞானியும் உலகத்திற்காக உழைக்கிறவன்தான். அதையும் மறுப்பதற்கில்லை. அவன் பங்கு இப்படி இருக்கிறது.

ஆனால் இந்த மொத்த உலகமுமே எதற்கு கட்டுப்பட்டு இருக்கிறது என்றால், பாசத்துக்குத்தான் கட்டுப்பட்டு இருக்கிறது. கணவன் மனைவியை கைவிடாது இருப்பதும், மனைவி கணவனை கைவிடாது இருப்பதும், இருவரும் சேர்ந்து பெற்றெடுத்த குழந்தைகளை காப்பாற்றுவதும், பாசத்தினால்தான். மனிதன் என்று மட்டுமில்லை. ஒவ்வொரு ஜீவராசியும் அப்படித்தான் இருக்கிறது. பறவை முட்டையையும், குஞ்சுகளையும் பாதுகாப்பதும், மாடு கன்றை பாலூட்டி வளர்ப்பதும், ஒவ்வொரு ஜீவராசியும் ஈன்றெடுத்த தத்தம் குட்டியை பார்த்து பார்த்து வளர்ப்பதும், இந்த பாசத்தினால்தான். இந்த ஜீவராசிகள் எல்லாம், வேதத்தில் சொல்லி இருக்கிறது, சாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறது என்பதற்காகவா காப்பாற்றுகின்றன? இல்லை. யானைக்கும், குரங்குக்கும், மாட்டிற்கும், கோழிக்கும், என்ன வேதம் தெரியும்?

ஆனால் பாசத்தை கொட்டுகின்றன. காட்டில் வாழ்கிறவன் தன் மனைவியிடம் அன்பாக இருக்கிறானே/ தன் இனத்தாருக்கு ஆபத்து வந்தால் அவன் போராடுகிறான். எதனால்? பாசத்தினால் அன்பினால்! அவன் எதை படித்து, இப்படி இருக்கவேண்டும் என தெரிந்து கொண்டான்?

இந்த பாசம் எனும் ஒரு கயிறினால்தான் உலகமே பின்னி பிணைக்கப்பட்டு இருக்கிறது. நூறு மணிகள் உள்ள மாலையை இணைப்பது ஒரு கயிறுதான். அப்படி எல்லோரையும் இணைப்பது பாசம் என்பதுதான். அந்த பாசம் என்கிற கயிறு அறுந்து விட்டால் ஒருவருக்கு ஒருவர் ஈடுபாடு இல்லாமல் மனிதர்கள் சுயநலவாதிகளாகி வெறுப்பு ஏற்பட்டுவிடும். பாசம் இருப்பதால்தான் ஒருவருக்கு வயதாகிவிட்டாலும் உடனிருப்பவர்கள் அவரை பார்த்துக்கொள்கின்றனர். உறவினர் மரணம் வந்தால் துக்கம் தாங்காமல் அழுகின்றனர். இறந்தவர் யாரோ எனில், ஏன் அழ வேண்டும்? பாசம்தான் இப்படி பிணைக்கிறது.

ஆனால் பாசத்தை விட உயர்ந்தது இருக்கிறது. பாசம் அதிகமானால் அதில் சுயநலம் கலக்கும், சுயநலம் அதிகமானால் யாரிடம் பாசம் அதிகம் காட்டுகிறோமோ அவர் தன்னிடமே அதிக பாசமுடன் இருக்கவேண்டும் என்ற போட்டியும் பொறாமையும் வரும். இந்த பாசம் எல்லை மீறி போனால் சமயத்தில் வெட்டு குத்தில் கொண்டுவிட்டு, உயிரை பலி வாங்கிவிடும். பணம், பதவி, புகழ், முதலியவற்றிற்கு மனிதர்கள் அடித்துக்கொள்கிறார்கள். அப்படியே இந்த பாசமும் வெறியாக மாறி விட்டால், பாசம் வைத்தவனுக்காக எதையும் செய்வேன் என ஆரம்பித்து வம்பு, கலகம், அடிதடி, வெறிச்செயல், என முடிகிறது.

இவ்வளவு பெரிய பூமியை படைத்த பகவான், அதில் தர்மம், பாசம், அஹிம்சை, சத்யம் என பல தந்தாலும், அது எல்லாம் மனிதனை முழுமையாக்குகிறதா? இல்லை. ஏன்? இத்தகைய விசித்ர சிருஷ்டியான இந்த பூமியில் ப்ரேமை என்பது மட்டும் இல்லாவிட்டால் மனிதர்கள் ROBOTஆக இயந்திரங்களைபோல இருப்பர். ஒருவருக்கு ஒருவர் மேலும், இயற்கை மேலும், எதன்மேலும் ஈடுபாடு இல்லை எனில் அது என்ன வாழ்க்கை? இயந்திர வாழ்க்கைதான். அன்பு, பாசம் இல்லாதுபோன பலர் இயந்திர வாழ்க்கை வாழ்கின்றனர்.

“ப்ரேமை” என்பது இருப்பதால்தான் இன்று வரை ப்ரபஞ்சம் என்பது மிகவும் அழகாக இருக்கிறது. பாசத்திற்கும், ப்ரேமைக்கும் வித்யாசம் உண்டு. தமிழில் ஆசை - அன்பு என இதைச்சொல்லலாம். ஆசை வேறு; அன்பு வேறு.

என்ன லாபம் என பார்ப்பது. இன்னும் சொல்ல போனால் அன்பு காரணமற்றது. பாசம் ஒருவர் மேல் வைத்து அவர் அந்த அளவு திருப்பி பாசம் வைக்கவில்லை அவரிடம் reflect ஆகவில்லை எனில், அது வெறுப்பை உண்டாக்கும். அது தன் மேலேயே வெறுப்பாக guiltஆக மாறலாம். அல்லது யார் மேல் பாசம் வைத்தோமோ அவரையே வெறுக்க வைக்கும். பாசம் மாறுபாட்டுக்கு உட்பட்டது. எதிர்பார்ப்பு தாங்கியது. யார் மேல் எந்த காரணத்தினால் பாசம் வைத்தோமோ அந்த எதிர்பார்ப்பு fulfill ஆகாமல் போனாலும் பாசம் அகன்று விடும். யார் மேல் பாசம் வைத்தோமோ அவரையே பார்த்து “ஆ! இவன்மேல் பாசம் வைத்தோமே, இவன் இப்படி பண்ணி விட்டானே” என தோன்ற வைத்து, நாளுக்கு நாள் படிப்படியாக பாசம் குறைந்து கொண்டே வந்து வெறுப்பாகி விடும்.

தவிர, பாசம் எதன் மேல் வைத்தோமோ அந்த வஸ்துவிற்கு நாசம் ஏற்படலாம்; மாற்றம் வரலாம். இது பாசம் வைத்தவர் மேல் வரும் மாறுபாடு மட்டும் இல்லை. பாசம் வைக்கும் நாமும் மாறலாம். ஸ்திரமாக ஒரே இடத்தில் பாசம் வைக்காமல் நமது சலிக்கும் புத்தியினால் இந்த பாசமானது ஓவ்வொரு சமயத்தில் ஒவ்வொருவரிடம் மாறிக்கொண்டே இருக்கும். நமது பாசமும் மாறுகிறது. நாமும் அழிவுக்கு உட்பட்டவர்கள்தானே!

இந்த பாசத்தைவிட உயர்ந்தது அன்பு. அன்பு என்பது பொறுமையை காட்டிலும் கருணையை காட்டிலும் மிக உயர்ந்தது.

ராமாவதாரத்தில் பூமியில் இருந்து வந்த சீதாதேவி பற்பல கஷ்டங்களையும் அவமானங்களையும் தாங்கிக்கொண்டு பொறுமையை ஸ்தாபித்த ஒரு அவதாரம். கருணை என்பதை சொல்லவேண்டுமானால் அதற்கு ஒரு ஹேது (காரணம் ) தேவைப்படுகின்றது. "இவன் நாலு நாளாக சாப்பிடவில்லை, அன்னமிடு"; "இவன் வியாதியஸ்தனாக இருக்கிறான்; இவனுக்கு ஆவன செய்", "இவனுக்கு படிக்க வசதியில்லை, தேவையானதை செய்"; "தாய்தகப்பனற்ற அனாதை குழந்தை, அடடா இதை காப்பாற்ற வேண்டும்"; என கருணையைக்காட்ட ஒரு காரணம் தேவைப்படுகின்றது. இப்படி எல்லாம் வந்தால்தான் அது கருணை. கருணை காரணம் இல்லாமல் வராது. நன்றாக சாப்பிட்டு தூங்கிகொண்டு இருக்கும் ஒருவனிடம் எதற்கு கருணை வரப்போகிறது? யார் எதற்காக காட்ட போகிறார்கள்/ "சௌகரிய பேர்வழிக்கு என்ன தேவை இருக்கபோகிறது?" என தோன்றிவிடும்.

ஆனால் ப்ரேமை என்பதற்கு காரணம் அவசியமில்லை. பணக்காரனிடமும் அன்பாக இருக்கலாம், ஏழையிடமும் அன்பாக இருக்கலாம். சகலரிடமும் ப்ரேமையாக இருக்கமுடியும். அதுதான் ப்ரேமைக்கு இருக்கக்கூடிய அழகு. அந்த ப்ரேமை ( அன்பு ) இல்லாவிடில், இந்த உலகம் ரசிக்கத்தக்கதாக, வாழத்தக்கதாக இருக்காது. பூமி எனும் தங்கப்பூவிற்கு நறுமணம்போல இந்த அன்பு இருக்கிறது. தர்மம், பொறுமை, அஹிம்சை, சத்யம், கருணை, ஆகியவற்றை ஸ்தாபிக்க அவதாரங்கள் வருவதுபோல, ப்ரேமையை ஸ்தாபிக்கும் ஒரு அவதாரம் தேவையானது.

பாகவதத்தில் எனக்கு மிகவும் பிடித்த ஒரு பெயர் "ப்ரியவ்ரதன்" என்பதுதான். "சத்யவிரதம்" கொண்டவர்கள் உண்டு. நேர்மையை விரதமாக கடைப்பிடிப்பவர்கள் உண்டு; உண்ணாவிரதர்கள் உண்டு. அதுபோல எல்லோரிடமும் ப்ரியமாக, அன்பாக இருப்பதையே விரதமாக கொண்டவனே ப்ரியவ்ரதன். அது ஒரு காரண பெயர். இந்த அன்பு என்பதே காரணமற்றதாக இருப்பதால் அது மாற வாய்ப்பு இல்லை. காரணம் இருப்பதால்தானே, காரணம் மாறுகையில், எதிர்பார்ப்பு நாசமுறுகையில் பாசம் மாறுகிறது? காரணமற்று இருக்கும் அன்பு எப்படி மாறும்? அது காரணமற்று சுபாவமாக வருவதினால், மாறுவதற்கு இடமில்லாமல் போகிறது. அந்த பிரியம் வைக்கப்பட்ட வஸ்து (நபர்) அழியலாம். ஆனால் வைக்கப்பட்ட அந்த பிரியம் அழியாது. அன்பை பொழிகிறவர் பல மாறுதலுக்கு உள்ளாகலாம், ஆனாலும் அவரிடம் உள்ள அன்பு மாறவே மாறாது. இந்த உயர்ந்த ப்ரேமையை யாரிடம் வேண்டுமானாலும் வைக்கலாம். ஏனெனில் எல்லோரிடமும் செலுத்தத்தக்கதும், பாத்ராபாத்ர பேதம் அற்றதுமது. ஆனால் அந்த ரசிக்கத்தக்க அந்த ப்ரியத்தை உத்சாஹப்படுத்த கூடிய ஓரிடத்தில் வைத்தால் அது இன்னும் மிளிர்கிறது.

ஒரு தீபம் கண்ணாடியில் பிரதிபலிப்பதுபோல, அன்பை வாங்கி அன்பை reciprocate செய்யத்தெரியவேண்டும். யாராவது நம் முன் வீணை வாசித்தால், “நன்றாக வாசிக்கிறாயே” என உற்சாகப்படுத்தவேண்டும். “என்ன இது உனக்கு வாசிக்க தெரியலையே” என்றால் அங்கே ரசிப்புத்தன்மை போய்விடுகிறது. குழந்தை நல்ல அலங்காரமுடன் வந்தால் பாராட்டி ரசிக்கவேண்டும். சந்திரன், புஷ்பங்கள், நீரோடை, இயற்கை, புல்லில் உள்ள பனித்துளி, பனியினாலும் மரங்களாலும் பச்சைக்கம்பளம் விரித்தற்போலுள்ள இமயம் போன்ற மலைகள் ஆகியவற்றை பார்த்தால் மனதில் ஒரு குதூகலம் ஏற்படவேண்டும். இந்த அற்புதமான ப்ரக்ருதியின் அழகை ரசிக்க தெரியவேண்டும். அப்படிப்பட்ட ஒரு ராசிக்யத்தன்மை உள்ளவரால்தான் தன் மீது வைக்கப்படும் ப்ரியத்தை உத்சாஹத்தால் வளர்த்து கொண்டே போக முடியும்.

ப்ரேமையை நன்கு வளர்க்க தெரிந்தவரிடம் வைத்தால்தான் அது இன்னும் வளரும். ஒரு அல்பமான சாக்லெட்டோ, தின்பண்டமோ, பொருளோ ஏதோ ஒன்றை தந்தால் கூட, அதிலுள்ள அன்பை பார்க்கத்தெரிந்தால்தானே அந்த அல்ப பொருளையும் அன்பாக வாங்கி அங்கீகரிக்க முடியும்? பொருளின் மதிப்பு, குணம் ,ஆகியவற்றை விட அன்புடன் தருவது என்பதுதானே முக்யமாகிறது? யாருக்காக? நமக்காக தந்தார்கள்! ஏன்? அன்பினால் தந்தார்களா!! “ஆஹா சந்தோஷம்” என சொல்லத்தெரிய வேணுமே! நாம் ஒன்றை அன்பாக தந்தால் அதை அன்பாக, அன்பிற்காக அங்கீகரித்து ப்ரதியாக உத்சாஹமாக அன்பு காட்டும் ஒருவர்தான், அன்பு காட்ட உகந்தவர். அதைத்தானே கண்ணன் கீதையில் பத்ரம், பலம், புஷ்பம், தோயம், என தரும் பொருள் எது என்பதைவிட, அது அன்பாக சமர்ப்பிக்கப்பட்டால் ஏற்று மகிழ்வேன் என்கிறான்.

எதை கொடுத்தோம் என்பதைவிட, எப்படி கொடுத்தோம் என்பது முக்யம். யாரோ ஒருவர் நமக்கு ஆபத்து - அவசிய காலத்தில் பணம் தந்து உதவினார். அந்த அவசர காலத்தில் அவர் உதவியதை வைத்து நம் உறவினரை, பெற்றோரை, மருத்துவமனையில் வைத்து காப்பாற்றினோம். அதை திருப்பி தருகையில் "அவருக்கு பணம் இருந்தது தந்தார்" என்று நினைத்துவிடுகிறோம். அப்படி இருக்கலாமா? "நீங்கள் தந்ததால்தான் என் அன்னை இன்று உயிரோடு இருக்கிறாள். மிகுந்த நன்றி" என உண்மையாக சொல்லி உணர்வுடன் திருப்பி தந்தால்தானே அது அன்பு. இப்படி பேசும் பேச்சு ஒருவருக்கு ஒருவர் அன்பை தூண்டி கொள்ளும் விதமாக அல்லவா இருக்கவேண்டும். அந்த பேச்சு போலியாகவும் இருக்கக்கூடாது. மனதில் அன்பு இருந்தால், பேச்சும் சரியாக இருக்கும். அனாவசிய பேச்சு தேவை இல்லை. கசப்பும், ப்ரயோஜனமற்றதுமான பேச்சுக்களை தவிர்க்கவேண்டும். ஆனால் அவசிய அன்பான பேச்சு நல்லது.

அத்தகைய கள்ளம்கபடமற்ற, காரணமற்ற, சுத்த அன்பை மிக கொஞ்சமாக க்ருஷ்ணனிடம் காண்பித்தாலும் போதும். அவன் உத்சாஹமாக அதை ஏற்று மறுபடி உத்சாஹத்தாலே அந்த அன்பை மேலும் வளர்த்துவிடுவான். அவனிடம் வைக்கும் அன்பிற்கு நாசம் இல்லை. அது அவனால் நம்மிடமும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்க போவது; அது குறையவே குறையாது. அத்தகைய பகவானுக்கும் அழிவு கிடையாது. அவனிடம் அன்பு வைத்தவர்களுக்கும் அழிவு கிடையாது. அந்த அன்பு சாஸ்வதமாக, நிரந்தரமாக அவனுடன் சேர்த்து வைத்து அன்புமயமாக ஆக்கி வைக்கும்.

உலகில் பல அவதாரங்கள் நிகழ்ந்துள்ளன என சொன்னேன். ப்ரேமைக்கு என ஒரு அவதாரம் அவசியமல்லவா? வரப்போகும் இந்த கலியுகத்தில் ப்ரேமை இல்லாமல் போனால் ஜீவராசிகள் மிகவும் துன்புற்று ஜடங்களாக இருப்பார்கள் என்பதால், பூமி வாழ்க்கையே கசந்துவிடும். அது இனிமையாக மாறவேண்டும் எனில், ப்ரேமை மயமான ஒன்று இந்த பூமியை தழுவவேண்டும். அதாவது பூமியில் சாந்தி நிலவ வேண்டும் என்பது போல ப்ரேமை நிலவ வேண்டும். தொட்டாச்சிணுங்கி என செடி உண்டு. தொட்டால் சுருங்கி விடும். சில புஷ்பங்களின் வாசனையை முகர்ந்தாலே அவை வாடிவிடும். அவ்வளவு sensitive. அப்படி இந்த பூமியில் யார் பாதம் பட்டால் அது ப்ரேம மயமாக மாறுமோ அத்தகையவர் அவதரிக்க வேண்டும். அதுதான் பூமிக்கு தேவை. எவ்வளவு அவதார புருஷர்களும், பகவானும் ,மகான்கள் பலரும் இங்கு வந்திருந்தாலும் ராதை என்ற ப்ரேமாவதாரம் நிகழவில்லை எனில் இந்த பூமி இன்று இப்படி இருக்காது. இங்கு பூமியில் ப்ரியம் எனும் மலர்(குணம்) ராதை என்ற ரூபத்தில் அவதரித்ததுதான் பூமியில் ப்ரேமை நிலவ காரணம். அனுராதா நட்சத்திரத்தில் பிறந்ததால் ராதா. ஸ்வாமினி, க்ருஷ்ணப்ரியை, ப்ருந்தாவனேஸ்வரி, பர்ஸானாராணி, ப்ரேமஸ்வரூபிணி, என அவளை அழைக்கிறார்கள்.

அந்த ராதை நம் ஹ்ருதயத்தில் என்றும் இருந்து அன்பை தூண்டித்கொண்டே இருக்கவேண்டும். சில ஜபங்களை செய்தால் சித்தி வரும்; சில சாந்தி தரும். சித்திகள் வந்தால் அதனால் கூட்டமும், “நடக்கப்போவதை சொல்கிறேன்” என்பதில் ஆரம்பித்து “சொன்னது நடக்கும்” என வந்து “எனக்கு பிரியமில்லாததை சொன்னான்” என முடிந்து, சண்டையிலும் அபவாதத்திலும் அபகீர்த்தியிலும் விடும். சித்திகள் வருவதை விட, வராமல் இருப்பதே நல்லது. ப்ரேமை மனதில் வர ராதையின் நாமமும் ராதையின் தியானமும் வேண்டும்.

பல அருமையான அவதார புருஷர்கள் வந்திருந்தாலும் எனக்கு மிகவும் பிடித்த ஒரு அவதாரம் ராதாராணியின் அவதாரம்தான். எந்த ஒரு ஸ்வாமினியின் பெயரை சொன்னால் மூர்ச்சை ஆகி சமாதி வந்து பாகவதம் சொல்லமுடியாமல் போய் விடுமோ என்பதால் அந்த பெயரைச்சொல்லாமலே, அவளைப்பற்றிச்சொல்லாமலே, சாக்ஷாத் சுகர் தவிர்க்கிறார் என்றால் நாம் எப்படி அவளை பற்றி சொல்வது? என்ன செய்வது? சொல்வது என வந்துவிட்டோம்! அதனால், அவள் சரித்ரத்தை தொடர்ந்து பார்த்துவருவோம்.....

தொடரும்...